www.Padasalai.Net www.TrbTnpsc.com

ARIYALUR DISTRICT

பதிவு எண் : 1 0 3 0 1

# முதல் திருப்புதல் தேர்வு - 2025

## தமிழ்

வகுப்பு : 10

மதிப்பெண்கள் : 100
நேரம் : 3.00 மணி

**அறிவுரை:** i) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

ii) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

**குறிப்பு :** i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**குறிப்பு : (i). அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**(ii). கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** 15x1=15

1. அருந்துணை என்பதைப் பிரித்தால் .............

அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருமை + இணை ஈ) அரு+இணை

2. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ..........

அ) முல்லை, குறிஞ்சி, முருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

3. சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல் எது?

அ) புறநானூறு ஆ) முல்லைப்பாட்டு இ) பரிபாடல் ஈ) மலைபடுகடாம்

4. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ............

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

5. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்,
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) உருவகம் ஈ) தீவகம்

6. வாய்மையே மழை நீராகி ........... இத்தொடரில் வெளிப்படும் அணி

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

7. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் .........

அ) அகவற்பா ஆ) வஞ்சிப்பா இ) வெண்பா ஈ) கலிப்பா

8. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?

அ) சிங்கப்பூர் ஆ) இலங்கை இ) மலேசியா ஈ) இந்தியா

9. தூசும் துகிரும் ஆரமும் அகிலும்- இப்பாடலடி இடம்பெற்றுள்ள நூல்

அ) முல்லைப்பாட்டு ஆ) தேம்பாவணி இ) சிலப்பதிகாரம் ஈ) கம்பராமாயணம்

10. "இங்கு நகரப் பேருந்துநிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது ............ வினா
"அதோ, அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது ............ விடை.

அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறை விடை

இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



11. “கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது” - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே.

அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய இ) கேட்டவர் : பாடிய ஈ) பாடல் : கேட்டவர்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

“வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவம் கோட்டம்மா!
நீ ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே”.

12. இப்பாடலடி இடம்பெறும் நூல் எது?

அ) பரிபாடல் ஆ) பெருமாள் திருமொழி இ) சிலப்பதிகாரம் ஈ) கம்பராமாயணம்

13. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) இளங்கோவடிகள் ஆ) கீரந்தையார் இ) பெருஞ்சித்திரனார் ஈ) குலசேகர ஆழ்வார்

14. மீளாத்துயர் - இலக்கணக்குறிப்புத் தருக. அ) எண்ணும்மை ஆ) பண்புத்தொகை இ) வினைத்தொகை ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

15. இப்பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

அ) மீளா, ஆளா ஆ) ஆளா, அடியேனே இ) சுடினும், தரினும் ஈ) நோயாளன், மருத்துவன்

## பகுதி - II (மதிப்பெண்கள் : 15)

### பிரிவு - 1

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.** **4x2=8**

16. “பொறித்த” - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்று பாரதியார் பாடினார்.

ஆ) நற்றிணை, “பிழையா நன்மொழி” என்று வாய்மையைக் கூறுகிறது.

18. வசன கவிதை - குறிப்பு வரைக.

19. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

20. “விடும்” என முடியும் திருக்குறளை எழுதுக.

21. “உடுப்பதூஉம், உண்பதூஉம்” இச்சொற்களில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.

### பிரிவு - 2

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்கவும்.** **5x2=10**

22. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.

1. தாமரை இலை நீர்போல, 2. மழைமுகம் காணாப் பயிர்போல

23. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.

அ) கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார், அவரை அழைத்து வாருங்கள்

ஆ) ஊட்டமிகு உணவு உண்டார், அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

24. பழமொழிகளை நிறைவு செய்க.

அ) ஒரு பானை ..........., ஆ) விருந்தும் ..........

25. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) விடு - வீடு ஆ) மலை - மாலை



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



26. அகராதியில் கண்டு பொருள் தருக : - அ) அகன்சுடர் இ) ஆர்கலி

27. கலைச் சொற்கள் தருக. அ) IRRIGATION ஆ) BELIEF

28. எண்ணுப் பெயர்களைக்கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.

அ) பதினெண்கீழ்க்கணக்கு, நூல்கள் .............

ஆ) நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி ............

## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்குச் விடையளிக்கவும்.** **2x3=6**

29. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பாரதியார், 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா', 'சிந்துக்குத் தந்தை', 'பாட்டுக்கொரு புலவன்' என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர் ; எட்டயபுர ஏந்தலாக அறியப்பட்டவர்; குயில்பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலிசபதம் முதலிய காவியங்களையும் படைத்தவர், பாப்பா பாட்டு, புதிய ஆத்திசூடி என குழந்தைகளுக்கான நீதிகளையும் பாடல்களில் தந்தவர்; இந்தியா, சுதேசமித்திரன் முதலிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

1. பாரதியார் எந்தெந்த இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றினார்?
2. பாரதியார் எவ்வாறெல்லாம் பாராட்டப்பெற்றார்?
3. பாரதியார் எழுதிய குழந்தைகளுக்கான நீதிநூல்கள் யாவை?

31. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.





### பிரிவு - 2

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **2x3=6**

32. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

34. 'அருளைப் பெருக்கி' எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடலை அடிபிறழாமல் எழுதுக.

(அல்லது) 'வெய்யோனொளி' எனத் தொடங்கும கம்பரின் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

### பிரிவு - 3

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2x3=6**

35. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. - இப்பாடலில் பயின்று வந்துள்ள அணியைச்சுட்டி விளக்குக.

36. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.

1. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
2. கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்
3. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



37. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்ற இரவு. - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி -IV (மதிப்பெண்கள் : 25)

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5x5=25**

38. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.
(அல்லது)
மாநில அளவில் நடைபெற்ற கலைத்திருவிழாவில் "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

39. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக. (அல்லது)
மாங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது - இது போல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்யவிருப்பனவற்றை பட்டியலிடுக. (அல்லது)
**மொழிபெயர்க்க.**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everrywhere and makes everything pleasant.

## பகுதி -V (மதிப்பெண்கள் : 24)

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்** **3x8=24**

43. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. (அல்லது)
"அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

44. ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அஃது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக. (அல்லது)
முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

45. கட்டுரை எழுதுக. "விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்". (அல்லது)
உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com